வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 13.01.2026 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

இந்தியா முன்னேறிய நாடாக மேம்பட, இளைஞர்கள் போதைப் பழக்கத்தை கைவிட வேண்டும் என, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

உயிரி தொழில்நுட்பத் துறையில் இந்தியா, முன் எப்போதும் இல்லாத அளவில் வளர்ச்சி அடைந்து இருப்பதாக, மத்திய உள்துறை, அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

உள்கட்டமைப்புத் திட்டங்களை துரிதப்படுத்துவதற்கான, பிரகதி வசதியினால், மாநிலங்களின் அணி உணர்வு மேம்பட்டுள்ளதாக, உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி. ஆதித்யநாத் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், தலா 3 ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசுத் தொகை வழங்க, முதலமைச்சர் திரு. ரங்கசாமி உத்தரவிட்டுள்ளார்.

---

*ராதாகிருஷ்ணன் 1 (9)*

இந்திய இளைஞர்கள் போதைப் பழக்கத்தை விடுத்து, ஆரோக்கியம், மற்றும், லட்சிய நோக்கை வளர்த்துக் கொண்டால் மட்டுமே, இந்தியாவை முன்னேறிய நாடாக மேம்படுத்த முடியும் என்று, குடியரசுத் துணைத்

தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். கல்வி நிறுவனங்களை, போதையில்லா வளாகங்களாக மாற்றுவது குறித்து, டெல்லி பல்கலைக்கழகம் சார்பில், இன்று புதுடெல்லியில் நடைபெற்ற பிரச்சார நிகழ்ச்சியில் பேசுகையில், அரசின் போதையில்லா பாரதம் இயக்கத்திற்கு ஏற்ப, இந்நிகழ்ச்சி அமைந்து இருப்பதாக பாராட்டினார். இந்நிகழ்ச்சி குறித்து ஒரு செய்தித் தொகுப்பு….

(வாய்ஸ்)

*ராதாகிருஷ்ணன்* 2 (14)

(வாய்ஸ்)

கல்வி நிறுவனங்களை போதையில்லா வளாகங்களாக மாற்றும் இயக்கம் தொடர்பான நிகழ்ச்சியில், குடியரசுத் துணைத் தலைவர பேசுகையில், போதைப் பழக்கத்தை ஒழிக்காவிட்டால், இளைஞர்கள் அதிகம் உள்ள நாடு என்ற அனுகூலத்தையே இந்தியா இழந்துவிட நேரும் என்றார். தீவிரவாதிகளுக்கு பணம் ஈட்டிக் கொடுப்பதே, போதைப் பொருட்கள்தான் என்பதையும், போதைப் பொருள் விற்பனை, மனித குலத்திற்கே எதிரானது என்பதையும் இளைஞர்கள் மறந்துவிடக் கூடாது என்று அவர் குறிப்பிட்டார்.

மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், போதையில்லா கல்வி வளாகங்கள் இயக்கம், புதிய கல்விக் கொள்கையின் நோக்கங்களுக்கும், முற்றிலும் பொருந்துவதாக கூறினார். கல்வி வளாகங்களில், போதை பொருட்களை முற்றிலும் தவிர்க்கும்

கலாச்சாரத்தை மேம்படுத்த, ஆசிரியர்கள், மற்றும், கல்வி நிர்வாகிகள், உயர் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

-----------------------------

*ஜெய்சங்கர்* (13)

நடப்பு 2026ஆம் ஆண்டில், பிரிக்ஸ் கூட்டமைப்பின் தலைமை பதவியில் உள்ள இந்தியா, உறுப்பு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பிற்கும், வளங்குன்றா வளர்ச்சி, புதுமையாக்கம், மற்றும், நெகிழ்த் தன்மைக்கும் உயர் முன்னுரிமை அளிக்கும் என வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், பிரிக்ஸ் உச்சி மாநாட்டிற்கான சின்னம், கருப்பொருள், மற்றும், இணைய தளத்தின் வெளியீட்டு விழாவில் அவர் பேசுகையில், பிரிக்ஸ் நாடுகளின் உள்ளாற்றலை ஒன்று திரட்டி, உலக நன்மைக்கு பயன்படுத்த, இந்தியா முக்கியத்துவம் அளிக்கும் என்றார். கடந்த 20 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் பிரிக்ஸ் கூட்டமைப்பு, மாறி வரும் உலகச் சூழலுக்கு ஏற்ப தன்னை, மாற்றிக் கொண்டு வருவதையும், மக்களை மையமாக கொண்ட வளர்ச்சி, மற்றும், நடைமுறை ரீதியிலான ஒத்துழைப்பிற்கு, முக்கியத்துவம் அளித்து வருவதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

-----------------------------

*அமித் ஷா குஜராத்* (16)

உயிரி தொழில்நுட்பத் துறையில் இந்தியா, முன் எப்போதும் இல்லாத அளவில் வளர்ச்சி அடைந்து இருப்பதாக, மத்திய உள்துறை,

அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார். உயிரி தொழில்நுட்பத் தேவைகளுக்கான நுண்ணுயிர் கிருமிகளை, முற்றிலும் பாதுகாப்பான முறையில் கையாள ஏதுவாக, காந்தி நகர் உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையத்தில், பயோ-கண்டெய்ன்மென்ட் மையம் அமைக்கும் பணிகளுக்கு, இன்று அவர் அடிக்கல் நாட்டினார். 2014ஆம் ஆண்டில் 10 பில்லியன் டாலராக இருந்த, இந்திய உயிரி பொருளாதாரத்தின் மதிப்பு, 2024ஆம் ஆண்டு இறுதி நிலவரப்படி, 166 பில்லியன் டாலராக அதிகரித்து இருப்பதாக அவர் தெரிவித்தார். 3 நாள் பயணமாக குஜராத் சென்றுள்ள திரு. அமித் ஷா, முன்னதாக, தமது சொந்த ஊரான மான்சாவில், மொத்தம் 267 கோடி ரூபாய் மதிப்பிலான, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைத்தார். சோம்நாத் சுய கௌரவ திருவிழா, ஓராண்டு காலம் நடைபெறும் என்றும், 2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை அகமதாபாத்தில் நடத்தும் வாய்ப்பை பெற, தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

------------------------------

*ஜிதேந்திரா- ஜி ராம் ஜி* (12)

மத்திய அரசின் விக்சித் பாரத் – ஜி ராம் ஜி திட்டத்தின் கீழ், கிராமப்புற மக்களுக்கு, ஆண்டுக்கு 125 நாள் வேலை வழங்குவதுடன், வேலை இல்லாத காலத்தில், மொத்தம் 60 நாள் வேலையின்மை படி வழங்கவும் வகை செய்யப்பட்டு உள்ளதாக, மத்திய பணியாளர் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். இதனால், நடவுக்

காலம், மற்றும், அறுவடைக் காலத்தில், விவசாயப் பணிகளுக்கு ஆள் கிடைக்காமல் போவதையும், தவிர்க்க முடியும் என்று, அவர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். ஜி ராம் ஜி திட்டத்தின் கீழ், ஊரக உள்கட்டமைப்பு, நீர்வளப் பாதுகாப்பு உள்ளிட்ட பொதுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும், திட்டப் பணிகள் டிஜிட்டல் முறையில் நிர்வகிக்கப் படுவதால், போலிப் பயனாளிகள் பிரச்சனை தீரும் என்றும், அமைச்சர் குறிப்பிட்டார்.

-----------------------------

*ராணுவம்* (14)

தீவிரவாதிகளுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை முடிந்துவிட வில்லை என்றும், எதிரிகள் ஏதாவது, துர்முயற்சியில் ஈடுபட்டால், திறம்பட்ட முறையில் பதிலடி கொடுக்கப்படும் என்றும், தலைமை ராணுவ தளபதி, ஜெனரல் உபேந்திர துவிவேதி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், எதிரிகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்கான முழு சுதந்திரத்துடன், முப்படைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டதற்கு சிறந்த உதாரணம், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை என்றார். ஜம்மு-காஷ்மீர், மற்றும், மேற்கு எல்லையில், கடந்த மே 10 முதல், நிலவரங்கள் பதற்றமாகவே உள்ள போதிலும், முற்றிலும் கட்டுக்குள் இருப்பதாக, ஜெனரல் துவிவேதி தெரிவித்தார். கடந்த ஆண்டு 31 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப் பட்டதில், 65 சதவிகிதம் பாகிஸ்தானை சேர்ந்தவர்கள் என்று அவர் கூறினார்.

நாட்டின் வடக்கு எல்லையில், நிலவரங்கள் ஸ்திரமாக நீடிக்கும் நிலையிலும், தொடர்ச்சியான கண்காணிப்பு தேவைப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

-----------------------------

*பிரகதி- யோகி 1 (7)*

நாடு முழுவதிலும் முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களின் அமலாக்கத்தை கண்காணித்து துரிதப்படுத்த, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட, பிரகதி வசதியினால், மாநிலங்களுக்கு இடையே, அணி உணர்வு அதிகரித்து இருப்பதாக, உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி. ஆதித்யநாத் கூறியுள்ளார். பிரகதி தொழில்நுட்ப வசதியின் நன்மைகள் குறித்து, இன்று லக்னோவில் அவர் பேசினார். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு....

(வாய்ஸ்)

*பிரகதி- யோகி* 2 (12)

(வாய்ஸ்)

2014ஆம் ஆண்டிற்கு முந்தைய காலகட்டத்தில், பல முக்கியத் திட்டங்கள் உரிய அனுமதி பெற முடியாமல் தடைப்பட்டு இருந்த நிலையில், பிரகதி வசதி தொடக்கப்பட்ட பின்னர்தான், பல பிரச்சனைகள் விரைந்து தீர்க்கப்பட்டு, திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ளதாக உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் கூறினார். குறிப்பாக உத்தரபிரதேசத்தில், மெட்ரோ ரயில், மற்றும், இதர ரயில்ப் பாதைக்

கட்டமைப்புகள், விரிவடைந்து இருப்பதற்கு, பிரகதி வசதியே முக்கிய காரணம் என்றும், இதற்கென பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும், அவர் கூறினார். தற்போது நாட்டிலேயே அதிகமாக, உத்தரபிரதேசத்தில் தான், மொத்தம் 10.48 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில், 330 உள்கட்டமைப்புத் திட்டங்கள் அமலாகி வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

-----------------------------

*புதுச்சேரி பொங்கல் பரிசு (11)*

புதுச்சேரியில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், 5 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு, தற்போது வழங்கப்பட்டு வரும் நிலையில், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், தலா 3 ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசுத் தொகை வழங்க, முதலமைச்சர் திரு. ரங்கசாமி உத்தரவிட்டுள்ளார். பரிசுத் தொகையை, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் உடனடியாக செலுத்தவும் அறிவுறுத்தப் பட்டுள்ளதாக, இன்று, முதலமைச்சர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. 3 ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசுத் தொகை வழங்குவது குறித்து, முதலமைச்சர் அனுப்பிய கோப்பிற்கு, துணை நிலை ஆளுநர் ஒப்புதல் அளித்ததை தொடர்ந்து, முதலமைச்சர் அலுவலகத்தின் இன்றைய அறிவிப்பு வெளியாகி உள்ளது.

-----------------------------

*புதுச்சேரி பொங்கல் (6)*

புதுச்சேரி பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரியில், இன்று நடைபெற்ற பொங்கல் திருவிழாவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், தமது துணைவியாருடன் கலந்து கொண்டார். மாநில கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம் உட்பட பலரும், இவ்விழாவில் கலந்து கொண்டு, மாணவிகளுடன் இணைந்து, பொங்கல் வைத்து கொண்டாடினர். விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

-----------------------------

*புதுச்சேரி ஆதிதிராவிடர் (7)*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினக் குடும்பங்களைச் சேர்ந்த, 18 வயது பூர்த்தி அடைந்த அனைவருக்கும், பொங்கல் பண்டிகைக்கான இலவச வேட்டி சேலைக்கு பதிலாக, தலா 1000 ரூபாய், அவரவர் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் என, அரசு அறிவித்துள்ளது. மொத்தம் சுமார் 1 லட்சத்து 34 ஆயிரம் பயனாளிகள் இதனால் பயன் பெறுவதாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தெரிவித்துள்ளது.

-----------------------------

*வேளாண் பயிற்சி (9)*

புதுச்சேரி அரசின் வேளாண் துறையும், பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையமும் இணைந்து, ஹைதராபாத்தில் உள்ள தேசிய வேளாண் விரிவாக்க நிறுவனத்தின் ஒத்துழைப்புடன், இயற்கை வேளாண்மை குறித்து, ஒதியம்பட்டில் நடத்திய ஒருநாள் பயிற்சி முகாமில்,

125க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயன் பெற்றனர். இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம், இயற்கை வேளாண்மைக்கு தேவையான இடுபொருட்கள், இயற்கை வேளாண்மையில் மண்வளத்தின் முக்கிய பங்கு, மற்றும், இயற்கை வேளாண் பயிர்களின் நோய் நிர்வாகம் குறித்து, வல்லுநர்கள் இம்முகாமில் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர்.

-----------------------------

*வானிலை (13)*

வடகிழக்கு பருவமழை அடுத்த 3 நாட்களில் தென்னிந்திய பகுதிகளில் இருந்து விலக வாய்ப்புள்ளதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப் படுகிறது. மழை வானிலை நாளை வரை நீடிக்கலாம் என்றும், ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில், பனிமூட்டம் காணப்படும் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, நாகை மாவட்டம் வேளாங்கன்னியில், 13 செ.மீ மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில் 8 செ.மீ மழை பதிவாகி உள்ளது. கனமழை காரணமாக, இன்று காரைக்காலில், அனைத்து அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், மற்றும், தனியார் பள்ளிகளுக்கு, விடுமுறை அறிவிக்கப்பட்டு இருந்தது.

-----------------------------

கிரிக்கெட் (4)

மகளிர் கிரிக்கெட்டில், நவி மும்பையில் இன்று மாலை நடைபெறும் WPL 20 ஓவர் போட்டியில், மும்பை-குஜராத் அணிகள் மோத உள்ளன. ஆடவர் கிரிக்கெட்டில், இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான, 2ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டி, ராஜ்கோட்டில் நாளை நடைபெறும்.

-----------------------------

மலையேற்றம் (16)

கேரள மாநிலம், நெய்யாறு வனவிலங்கு சரணாலயப் பகுதிக்குள், கடல் மட்டத்தில் இருந்து, ஆயிரத்து 890 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள, அகஸ்தியர்கூடம் சிகரத்திற்கான மலையேற்றப் பயணம், நாளை முதல், அடுத்த மாதம் 11ஆம் தேதி வரை அனுமதிக்கப்படும் என, மாநில அரசின் வனத்துறை அறிவித்துள்ளது. போனக்காட் வனப் பகுதியில் இருந்து, கடினமானப் பாதையில், 16 கிலோ மீட்டர் நடந்து, அதிர்மலா அடிவார மையத்தை அடைந்த பின்னர், அகஸ்தியர்கூடம் மலைச் சிகரத்திற்கான செங்குத்துப் பாதையில், மலையேற்றம் தொடங்கும் என்றும், அன்றைய தினமே கீழிறங்க முடியாதவர்கள், சிகரத்தில் ஓரிரவு தங்கியிருந்து, மறுநாள் அடிவார மையத்திற்கு வரலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மருத்துவ சான்றிதழ் அடிப்படையில், முன்கூட்டியே அனுமதி பெறுவோர் மட்டுமே, மலையேற்றப் பயணத்தில் அனுமதிக்கப் படுவார்கள் என்றும், கேரள அரசின் வனத்துறை தெரிவித்துள்ளது. ஐநா பட்டியலில் இடம்பெற்றுள்ள அகஸ்தியர்மலை பல்லுயிர்ச் சூழல் மண்டலத்திற்குள் இப்பகுதி வருவதை கருத்தில் கொண்டு, மலையேற்றப் பயணத்தில், பிளாஸ்டிக் உட்பட,

சுற்றுச் சூழலுக்கு எதிரான பொருட்கள், முற்றிலுமாக தடை செய்யப் பட்டுள்ளன.

-----------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இந்தியா முன்னேறிய நாடாக மேம்பட, இளைஞர்கள் போதைப் பழக்கத்தை கைவிட வேண்டும் என, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

உயிரி தொழில்நுட்பத் துறையில் இந்தியா, முன் எப்போதும் இல்லாத அளவில் வளர்ச்சி அடைந்து இருப்பதாக, மத்திய உள்துறை, அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

உள்கட்டமைப்புத் திட்டங்களை துரிதப்படுத்துவதற்கான, பிரகதி வசதியினால், மாநிலங்களின் அணி உணர்வு மேம்பட்டுள்ளதாக, உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி. ஆதித்யநாத் கூறியுள்ளார்.

புதுச்சேரியில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், தலா 3 ஆயிரம் ரூபாய் பொங்கல் பரிசுத் தொகை வழங்க, முதலமைச்சர் திரு. ரங்கசாமி உத்தரவிட்டுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது